Nësss
aperin Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷ
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ ஆடி மீ கசு உ (1947 ஆகஸ்ட் 1 வெள்ளிக்கிழமை) [இல ந௨சு

## பிரார்த்தனை

கடலே யனைய ஆனந்தங் கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே யருளுதிபென் றுணர்த்தா தொழிந்தேகழிந்தொழிந்தேதன்
சுடரா ரருளா லிருணீங்கச் சோதீ யினித்தான் துணியாயே.

துணியா வுருகா அருள்பெருகத் தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியா ருனக்குள்ள அன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித் தளிர்ப்பொற் பாதந் தாராயே.

—மணிவாசகர்

## இந்தியத் தேசாதிபதிகள்

### யார் யார் நியமிக்கப்படுவர்?

இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு பாகங்களுக்குமுரிய மகதிரிகளை, மாகாணத் தேசாதிபதிகளாக யார் யாரை நியமிப்பது என்ற தீர்மானம் முறையே காங்கிரசாலும், முஸ்லிம் லீக்காலும் வருகிற திங்கட்கிழமைக்குமுன் செய்து, இராஜப்பிரதிநிதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மத்திய மாகாணத்துக்கு முந்தி மைசூர், ஹைதராபாத் திவானாகவிருந்த சேர். மிர்ஸா இஸ்மெயில், பீகார் மாகாணத்துக்கு மவுலானா அபுல்கலாம் அஸாத், மேற்கு வங்காளத்துக்குக் காங்கிரஸ்தலைவராகவுள்ள ஆச்சார்ய கிருபாலினி, மத்திய மாகாணத்துக்கு டக்ரர் பி. ஆர். அம்பெத்கார் என்பவர்கள் அநேகமாகத் தேசாதிபதிகளாக நியமிக்கப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது.

பாகிஸ்தானின் ஸிந்து மாகாணத் தேசாதிபதியாக, இப்போது அம்மாகாண பிரதம மந்திரியாயுள்ள குலாம் ஹூஸெயின் ஹிதாயத்துல்லா நியமிக்கப்படலாம்.

## நயினாதீவு படகு விபத்து

### இறந்தவர்களின் விபரம்

நயினாதீவுக்கு அருகில் நடைபெற்ற கோரப் படகு விபத்தில் காலஞ்சென்ற 11 பேர்களுடைய பெயர்களும் பின்வருமாறு:—

(1) வினாசித்தம்பி வேலாயுதம் (33 வயது (2) கார்த்திகேசு நாகமுத்து (45 வயது) (3) நாகலிங்கம் சச்சிதானந்தம் (14 வயது மாணவன்) (4) ராமலிங்கம் சின்னத்தம்பி (30வயது) (5) நாகமுத்துவின் மனைவி மீனாட்சி (35) வயது) (6) கணேசு மனைவி சின்னம்மா (26 வயது) (7, 8, 9) கார்த்திகேசு நாகமுத்துவின் மூன்று குழந்தைகள் (10) கணேசுவின் வேலைக்காரி (11) சின்னத்துரையின் இரண்டு வயதுக் குழந்தை.

மரணமடைந்தவர்களின் பிரேதங்கள்மீது புங்குடுதீவு சட்ட வைத்திய அதிகாரி மரண விசாரணை நடத்தினார்.

(இது சம்பந்தமான கடைசிப் புதினத்தை 3 பக்கத்திற் பார்க்கவும்,)

## இந்தனேஷிய விவகாரம்

### நேருவின் பலமான நடவடிக்கை

இந்தனேஷியாவிலே ஒல்லாந்தர் இயற்றும் அக்கிரமங்களைத் தடுக்கப் பண்டிதர் ஜவஹர்லால் நேரு தீர்மானித்துவிட்டார். ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனப் பாதுகாப்புச் சபையிலே ஒல்லாந்தரின் அக்கிரமத்தை விளக்கி அதனைத் தடுப்பதற்கான மார்க்கத்தை உடனே அச்சபை வகுக்குமாறு வற்புறுத்த, இந்தியாவின் பிரதிநிதிக்குப் பண்டிதர் நேரு கட்டளையிட்டுவிட்டார்.

இதுவுமன்றி, இந்தியாமீது ஒல்லாந்த விமானங்கள் பறந்து செல்வதையும் உடன் தடைசெய்ய நேருவின் அரசாங்கம் தீர்மானித்துவிட்டது.

இந்தனேஷியாவின் உதவிக்கு இந்தியா உடனே ராணுவம் அனுப்புமா? அது விஷயம் இப்போது யோசிக்கப்படுகிறதா என்று ஓர் பத்திரிகை நிருபர் பண்டிதர் நேருவைக் கேட்டார். "இல்லை, நாங்கள் இவ்விஷயமாக இப்போது ஆலோசிக்கவில்லை" என்று நேரு பதிலிறுத்தார்.

ஒல்லாந்த அரசினருடன் கொண்டிருக்கும் ராஜீய உறவைத் துண்டிதுக்கொள்ள ஆலோசிக்கப்படுகிறதா என மற்றொரு கேள்வி நேருஜியினிடத்துக் கேட்கப்பட்டது. இக்கேள்விக்கும் "இல்லை" என பண்டித நேரு பதிலளித்தார். அவர் கூறியவை பின்வருமாறு:—

"சண்டையை எவ்வாறு நிறுத்துவது? இந்தனேஷிய விவகாரத்தை எவ்வாறு ஐ. நா. பா. சபை முன்பாகக் கொண்டுவருவது? என்ற இரு விஷயங்களே நம்முன்னுள்ள உடனடியான பிரச்சினை.

"ராஜ்ய உறவுகளைத் துண்டித்தல், ஆட்சேபத்தைத் தெரிவிக்க நல்ல யுக்தி மார்க்கமாகவிருக்கலாம். ஆனாலும். பிரச்சினைக்கு உடனடியாக யாதேனும் ஒரு முடிவை அடைந்துவிட வேண்டுமென்பதே எங்கள் ஆசை" என்று நேருஜி கூறினார்.

நேருஜி பேசுகையில் இந்தோனேஷிய விவகாரத்தில் ஐ நா. பா. சபை தலையிட்டு உருப்படியான நடவடிக்கை [illegible] மாக வற்புறுத்தினர்.

## சக்தியின் மகிமை

[ டக்ரர் T. M. P. மஹாதேவன், M. A., Ph. D. ]

மாயை, பிரகிருதி, சக்தி என்னும் பெயர்களால் எந்த தத்துவத்தை வேதாந்திகள் குறிப்பிடுகின்றனரோ, அதையே பக்தன் அன்னையாகப் பாவிக்கின்றான் முக்தி நெறிகளுள் பக்தி முக்கியமானது. மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடவுளிடத்து நாம் வைக்கும் பிரீதிக்குப் பக்தி என்று பெயர். 'பரமப்ரேமையே இதற்கு உருவம்' என்று நாரதர் தம்முடைய பக்தி சூத்திரத்தில் கூறுகின்றார். 'அவிவேகிகளுடைய எந்த பிரீதி இடையறாது வெளிப்பொருள்கள்பால் செல்கின்றதோ, அதுவே உன்னை ஸ்மரிக்கும். என் இருதயத்திலிருந்து அகலாது நிற்க வேண்டும்' என்று ப்ரஹ்லாதன் ஈசுவரனிடத்துப் பிரார்த்தித்தான். அன்பின் முன்னிலையில் உருகாதது ஒன்றும் இல்லை கருணைக் கடலாகிய கடவுள் அன்புக்கு உருகானு? பண்டைநாள் முதற்கொண்டு இதுவரையில் பெரியோர் பலர் அன்பு வழியைக் கடைப்பிடித்து ஈசனை அடைந்துள்ளார்கள்: அவன் புகழை வாயாரப் பாடி, அவன் உருவத்தை மனமாரச் சிந்தித்து பிறவியாலான பயனை எய்தியுள்ளார்கள்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தமே உருவாய் கடவுள் இருப்பது உண்மையே. ஆனால், குணமற்றும், மாறுதல் இன்றியும், அகன்ற சச்சிதானந்தமாய் விளங்கும் பிரம்ம தத்துவத்தை, உடலோடு கூடிய நம்மால் எளிதில் அறிய இயலாது! வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத பொருளன்றோ அது! அகந்தையோடு எவ்வளவுமுயன்றாலும் ஆத்ம ஞானம் சித்திக்கிட்டாது. அத்வைத வாஸனைக்கும் அவனருள் வேண்டும்.

ஈசுவர அனுக்ரகத்தினால்தான் இது வெகு சிலருக்குக் கிடைக்கின்றது ஆகையால் உருவற்ற பொருளுக்கு உருவைக் கற்பித்து, குணமற்றதின்பால் குணங்களை ஆரோபித்து, அதை நாம் கடவுளாக வழிபடுகின்றோம். இந்த வழிபாடு பயனற்றதல்ல. இதனுடைய முடிவு ஆத்ம ஞானமே.

பக்தர்கள் பல்வேறு விதமாகக் கடவுளைப் பாவித்திருக்கின்றனர். சமயங்கள் பலவாகவிருப்பதற்குக் காரணம் ஈசுவர வழிபாட்டு முறையின் வேற்றுமைதான். ஆணாகவும், பெண்ணாகவும், முதியோனாகவும், இளையோனாகவும், ஈசுவரனை ஆராதித்திருக்கின்றனர் முன்னையோர். 'சுவேதா சுவதரம்' என்னும் உபநிஷதத்தில் பரதத்துவம் இவ்வாறு புகழப்பட்டிருக்கின்றது:—

'பெண்ணும் நீ, ஆணும் நீ; சிறுவன் நீ, சிறுமியும் நீ; கிழத்தனம் பூண்டு, கைகோல் ஏந்தி, தள்ளாடுகின்றாய் நீ; பிறப்புற்று எங்கும் நோக்கி நிற்கின்றாய் நீ.' பிரமன், விஷ்ணு சிவன் என்றும், கணபதி, சுப்பிரமணியன் என்றும், சரஸ்வதி, லக்ஷ்மி, மகேஸ்வரி என்றும் பலவாறு கடவுளைப் பூஜிக்கின்றோம். ஹிந்து மதத்தி[illegible] நாம் ஹிந்துமதத்தின்போற் [illegible] அம்சங்களில் ஒன்று ஈசனை யடைய பலவழிகள் உண்டு என்பது. எங்கும் நிறைந்த பொருளானபடியால் எவ்வுருவிலும் அவன் தோன்றுவான், தூணில் இருப்பான், துரும்பிலும் இருப்பான்; அப்பன் அவன், அம்மையும் அவன், அன்புடைய மாமனும் மாமியும் அவன். கடவுளைக்கொழுநனாகப் பாவித்த பக்தர்கள் பலர்; யசோதையைப்போல் குழவியாகப் பார்த்தவர்கள் அனேகர்; ஸ்ரீராமகிருஷ்ணர் முதன்முதலில் 'அன்னை' எனப் போற்றினர் கருணாமூர்த்தியான முழுமுதற் கடவுளை.

நம் மதத்தின் ஒரு சாராராகிய சாக்தேயர்கள் சக்தியை ஒப்பற்ற தெய்வமாக வழிபடுகின்றார்கள். பிரம விஷ்ணு ருத்திரர்களுக்கு ஆதாரமாய் இருப்பது சக்தியென்றும், சக்தியில்லையேல் ஆக்கல், காத்தல், அழித்தல் முதலிய காரியங்கள் நடக்காதென்றும் கருதுகின்றார்கள். அசையாத தத்துவம் சிவம் என்றால், அசைவிக்கும் தெய்வம் சக்தி. சாந்தமாய், நிர்க்குணமாய், யாவற்றையும் கடந்து நிற்பது சிவம். அண்டசராசரங்களைச் சிருஷ்டித்து, காத்து, சம்ஹரிப்பது சக்தி. சக்தியோடு கூடினால்தான் சிவனுக்கும் 'பிரபு' என்ற பெயர் சித்திக்கின்றது. அனைத்தையும் ஈன்ற அன்னை பராசக்தி. அவள் மூலம் தான் பரசிவத்தை யடைய முடியும். புத்தியிலுள்ள ஞான சக்தியும், மனதிலுள்ள இச்சா சக்தியும், உடலிலுள்ள கிரியாசக்தியும் அவளுடையதே. அவளன்றி ஓர் அணுவும் அசையாது. யாக்கையை அளித்து, இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்கின்றாள் அவள். பிறவியை அறுத்துப் பேரின்பத்தைக் கொடுக்கின்றவளும் அவள்தான். சத்துவ, ராஜச, தாமச குணங்களாலன்றோ பசுக்களாகிய நாம் ஆக்கப்பட்டுள்ளோம். இவை மூன்றும் பராசக்தியின் அம்சங்கள். இவற்றைத் தாண்டுவதற்கு அவளுடைய அருள் வேண்டும். குணங்களுக்கு அப்பால் நிற்கும் சாந்த சிவத்தை யடைய வழி, திரிகுணாத்மிகமான சக்தி. உண்மையில் சிவமும் சக்தியும் வேறன்று. அறியாமையால் வேறாகத் தோன்றுகின்றன. உயரிய ஞானம் எதுவென்றால் சக்தியும் சிவமும் ஒன்று என்று உணர்வது. யோகிகள் இதையே மூலாதாரத்தில் உறங்கும் குண்டலினி சக்தியை எழுப்பி சஹஸ்ராரத்தில் பிரகாசிக்கும் சைதன்ய சிவத்தோடு சேர்ப்பது என்று சொல்கிறார்கள். இதையே வேதாந்திகள் மாயையைக் கடந்து சச்சிதானந்த பிரம்மத்தை வேற்றுமை யற்றதாக அறிவது என்று கூறுகிறார்கள்.

ஈறாகக் குறிப்பிட்ட வேதாந்த தரிசனத்தைப் பின்பற்றியவர்களுக்கு மாயையே சக்தியாகத் தோன்றுகின்றது. எந்த சக்தி, உள்ள வஸ்துவாகிய பிரம்மத்தை மறைத்து, பொய்யான பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கின்றதோ அதுவே மாயை. மாயையே தான் சப்த ரூபியாகவும்,

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ
ஆடிமீ கசு ௨ வெள்ளிக்கிழமை

## இலவசக் கல்வியால் நன்மையில்லையா?

இந்நாட்டின் தாய்ப்பாஷைகளாகிய தமிழுஞ் சிங்களமும் அன்றுதொட்டு இன்று வரையும் இங்குள்ள மக்களுக்கு இலவசமாகவே பயிற்றப்பட்டு வரலாயின; ஆனதால் இப்பொழுது இலவசக்கல்வியென்று பாராட்டப்படுதல் இங்குள்ள பிள்ளைகள் ஆங்கில மொழியைப் பள்ளிக்கூட வேதனமின்றிப் படித்தலேயாகும்; ஆங்கிலம் படிக்கக் கனவிலும் நினையாத வறிய பிள்ளைகளும், தங்கள் மக்களுக்கு ஆங்கிலக் கல்வியையூட்டுதற்குச் சொப்பனத்திலும் எண்ணாத ஏழைப் பெற்றாரும், இந்த இலவசக் கல்விமுறை வந்தபின் ஆங்கிலக் கலாசாலைகளிற் சேர்ந்து படிக்கவும், சேர்த்துப் படிப்பிக்கவும் முறையே காண்கின்றோம்; இக்காரணத்தினாற்றான் கல்வி பயிலும் பிள்ளைகளின் தொகை முன்னரைக் காட்டிலும் பன்மடங்கு அதிகப்படலாயிற்று.

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" என்றவாறு நாட்டிலுள்ள மக்களுக்கு இயன்றவரையில் இலவசமாகக் கல்வியூட்டி அவர்களுடைய ஞானக் கண்ணைத் திறந்துவிடுதல் சீர்திருந்தியவர்களெனத் தம்மை மதித்திருக்கும் அரசினர் கடமையாகும்; இந்த மேலான நோக்கத்தோடு இலவசக் கல்வியைப் பலவருடங்களாகப் பாடுபட்டுக் கொண்டுவந்து நிறைவேறச் செய்தவர் இப்பொழுதும் கல்விப்பகுதி மந்திரியாகவிருக்கின்ற புண்ணியவானாகிய மிஸ்ரர் கன்னங்கரா அவர்களாவர்; இந்தப் பெரியாரை வாழ்த்தாத ஏழை மக்கள் இலங்கையிற் சிலரினுஞ் சிலரேயாவர்; ஆனாலும் உவப்பான பொருள்களும் நன்மையான கருமங்களும் மிகச் சிலருக்கு வெறுப்பாகவும் தீமைபோலவும் புலப்படுதலுமுண்டல்லவா? சுரநோய் வாய்ப்பட்டார்க்கு இனிய பண்டங் கசத்தலும், திருட்டருக்கு நிலா வெறுப்பாயிருத்தலும், கோட்டானுக்குச் சூரிய ஒளி அதன் கண்ணொளியைக் கெடுப்பதும் இயல்பல்லவா? இவை போலவே இந்த இலவசக் கல்வியால் நன்மையில்லையென்பாரும், இலவசக் கல்வியை இந்நாட்டில் நிலவச் செய்த கல்வி மந்திரியை வெறுத்துக் குற்றஞ் சொல்வாரும் சிலரினுஞ் சிலர் உளரென்பது நிசம்; அவர்கள் அப்படி இலவசக் கல்வியையும் அதற்குக் காரணராயுள்ள மந்திரியையும் வெறுத்தல் சுயநலங் கருதியென்பது பலரறிந்த இரகசியம். புதிய கல்விமுறைத் திட்டத்திலே சமயசம்பந்தமாக வந்துள்ள சில கட்டுப்பாடுகள், அந்நிய மதத்தினர் தங்கள் மதத்தினரல்லாராகிய பிள்ளைகளை, தங்கள் கலாசாலைகளிலே சேர்த்துப் படிப்பித்துச் சமய மாறுதல் செய்தற்கு நேர்ந்த இடையூறே அம்மதத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலருக்கு இலவசக் கல்வியினால் வெறுப்பை யுண்டாக்கி விட்டவெனச் சொல்லல் தவறாகாது.

இலவசக் கல்வியை இந்த இலங்கையிலே வைத்து நடத்துவதற்கு அரசிறை வருவாய் போதாதென்பது சிலருடைய கொள்கை; அது நிசமாயிருக்கலாம்; ஆனால் அரசினர் இக் கல்வியை யூட்டுதற்குப் போதிய வருவாயை ஆக்குதற்கு ஆக வேண்டிய வழிகளை அநுசரிக்க வேண்டும்; மேலும் வித்தியாசாலைகளை வைத்து நடத்தும் அதிகார சபையினர் தாம் நடத்தும் வித்தியாசாலைக்கு அரசினருதவும் நன்கொடைப் பணத்தை மாத்திரம் எதிர்பார்த்துக்கொண்டிருக்க வொண்ணாது; மிஷனரிமார் தங்கள் வித்தியாசாலைகளை முட்டுப்பாடின்றி நடத்துதற்குக் காரணம் அவர்கள் தங்களுக்குரிய சபைகள் வாயிலாகவும் காலந்தோறும் பொருளைப் பெற்றுச் செலவிடுதலேயாகும். சைவ வித்தியாசாலைகளையாக, பௌத்த வித்தியாசாலைகளையாக, இஸ்லாமிய வித்தியாசாலைகளையாக வைத்து நடத்தும் அதிகாரிகள் தம் சமயப் பிள்ளைகள் கல்வி கற்றற்பொருட்டுத் தாங்களும் தங்களாலியன்ற கைப்பொருளைச் செலவிடவேண்டும்; அக் கலாசாலைகளிற் கல்வி பயிற்றும் ஆசிரியர்களும் தங்கள் மாசவேதனத்தில் ஒருவிகிதத்தைத் தாம் படிப்பிக்கும் வித்தியாசாலையின் பொருட்டுச் செலவு செய்தல் வேண்டும்; இவர்களைக் காட்டிலும் இலவசக் கல்வியைத் தங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டுவிக்குஞ் செல்வப் பெற்றார் தங்கள் தங்களாலியன்ற பொருளை உலோபமின்றி உதவி வருதல் வேண்டும்; கலாசாலை அதிகாரிகள் உபாத்தியாயர்கள் பெற்றார் என்னும் இம்மூன்று பகுதியாரிடத்தும் பரஸ்பரம் ஒற்றுமையும் நன்னோக்கமுமிருக்குமானால், இலவசக்கல்வி இந்நாட்டில் இடையூறின்றி நடைபெறுதல் முடியும்.

மேலும் கல்விமந்திரி இட்ட இலவசக் கல்வியாகிய விதை அங்குரித்துச் சிறிது வளரமுயலும்போது, இதனை இன்னுஞ் சிலகாலம் பாதுகாத்துவரின், புதிய பாராளுமன்றத்தார் இவ்விலவசக் கல்விக்கு இடையூறு நேராவண்ணம் பேணி வளர்ப்பார்களென இலங்கை மக்கள் நம்பி யிருக்கின்றனர்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—25)

"படைமுகத்திலும் அறிமுகம்"

"தங்காய், இப்பொழுது சுகமாகவிருக்கிறதோ" என்று சிவபாக்கியங் கேட்க, 'ஓம், அக்கா, அந்த மருந்தைப் பூசியபின் கணுகுத்து மாறிவிட்டது, தலைவலி இன்னமுங் கொஞ்ச மிருக்கிறது" என்று பாக்கியலட்சுமி பதில் கூற "அதுவும் சற்று நேரத்துள் நின்றுவிடும்" என்றாள் சிவபாக்கியம்; 'இராமன் மருந்தை யாரிடம் வாங்கி வந்தாய், நல்ல மருந்து, கப்பலிலுள்ள டக்ரரிடம் வாங்கினையா" என்று சிவபாக்கியங் கேட்க, "இல்லை, சின்னம்மா, கப்பலிலிருக்கும் டக்ரருக்குத் தமிழ் தெரியாது, எனக்கு இங்கிலீசு தெரியாது, ஆனதால் நான் கேட்பது அவருக்கு விளங்காது, அவர் சொல்லுவது எனக்குப் புரியப்படாது, இந்த மருந்தைத் தந்தவர் இக் கப்பலிலே பயணம் பண்ணும் எங்களூரிலுள்ள ஒரு ஐயாதான்: அவர் நல்ல மனுஷன், நான் அறிவேன், என்னிடத்திலே அவருக்கு அதிக பற்றுண்டு; அவரிடம் நான் தலையிடிக்கு ஏதும் மருந்துண்டோ என்று கேட்டது தாமசம், உடனே பதைபதைத்துப் போய்ப் பெட்டியைத் திறந்து எடுத்துக்கொண்டோடிவந்து தந்துசீக்கிரங் கொண்டுபோய்க் கொடுத்துப் பூசச்சொல் என்று அன்பாகச்சொன்னார்; அவரை நீங்க ளறியமாட்டீர்கள் எங்கள் ஆச்சிக்குத் தெரியும். சின்னத்தங்கைச்சியும அன்று மாலை நேரத்தில் ஒருபோது அவரைக் கண்டிருக்கக்கூடும்" என்றான் இராமன்.

"அம்மா, தங்கைச்சிக்கு இந்த மருந்தை அனுப்பின ஆளை உங்களுக்குத் தெரியுமாமே, அது ஆர் அம்மா" என்று சிவபாக்கியம் தாயைக்கேட்க, "ஓம், மகளே, முந்தி அந்த ஆளை எங்கோ கண்ட ஞாபகம் எனக்கிருக்கிறது எங்கே கண்டேனென்பது ஞாபகமில்லை: ஆனால், அந்த ஆளுக்கு எங்களை எங்கள் குடும்பத்தைப் பற்றி நல்லாய் விளங்குமென்று இராமன் சொன்னான்; படைமுகத்திலும் அறிமுகம் என்ற விதமாய் எங்களை அறிந்த ஒருவர் இந்தக் கப்பலிற் பயணம் பண்ணுவதும் நன்மைதானே, சற்று முந்திச் சின்னத்தங்கைச்சி தலைவலியாற் பட்டபாட்டிற்கு அந்த ஆள் அனுப்பிய மருந்தல்லவோ உதவியது; இல்லாவிட்டால் இன்னமுந் தலைவலியுங் கண்குத்தும் மாறாவே" என்று கண்ணகியம்மை சொன்னாள்

"அம்மா, அந்த ஆள் உங்களோடு ஒன்றும் பேசவில்லையோ; நீங்கள் அந்த ஆளோடு ஏதும் பேசவில்லையோ; ஒரு ஊரிலிருந்து பிரயாணம் பண்ணுகிறவர்கள், அவர்களும் அறிந்தவர்களென்றால், நீங்கள் எவ்விடம், எங்கே போவது? என்று ஏதுங் கேட்டிருக்கலாமே, நாங்கள் தாம் குமர்ப்பிள்ளைகள் அறியாத ஆடவரோடு பேசுவது முறையல்ல நம்மை மதித்து நடப்பவரை நாமும் மதித்துத்தானே நடக்கவேண்டும், அம்மா..." என்று சொல்வதற்கிடையில், "மகளே, நீ சொல்வது முழுவதுஞ் சரி, ஆனாலும், இந்த வயசு சென்றும் ஆண்களோடு நானுகப் போய்ப்பேச எனக்குக் கூச்சம்; மகளே. அந்த ஆளாகவந்து ஏதுங் கேட்டிருந்தால், நானும் பதில் சொல்லி அவரைப்பற்றி விசாரித்திருப்பேன்...." என்று தாய் விடை சொன்னாள்; "ஆச்சி, ஆண்பிள்ளைகளோடு பேசக் கூச்சமென்கிறீர்கள்; நானும் ஆண்பிள்ளைதானே, ஆச்சி என்னோடு கூசமில்லை மற்பேசுகிறீர்கள், நான் ஏதும் தவறு செய்தால் என்னைக் கூச்சமில்லாமல் ஏசுகிறீர்கள்" என்று இராமன் சொல்ல [illegible] சிரித்தார்கள்;

"ஆச்சி, அந்த ஐயாவே முதல் உங்களோடு ஏதும் பேசினால், நீங்கள் பிறகு பேசுவீர்களா" என்று கேட்க, "பேசினாற் பேசத்தானே வேணும் இராமன்" என்றாள் கண்ணகி; பின்னருஞ் சிறிது நேரம் பேசிவிட்டு, இராமனுந் தன்னிடத்திற் போய்ப் படுத்தான்; அவர்கள் மூவரும் படுத்துறங்கினர்.

"ஆங்காலந்தானே ஆகும்"

அடுத்தநாட் காலையில் அந்த மனுஷன் இராமனைக் கண்டு, "சென்ற இரவு யாருக்குச் சுகமில்லை, இப்பொழுது சுகமா" என்ற கேள்விகளைக் கேட்டபோது, அவன் அதற்காகிய மறுமொழிகளைச் சொல்லி, அவ்வளவோடமையாது "இன்றுபின்னேரம் ஆச்சி இங்கு வரும்போது உங்களையுங் காணவேணுமென்று எனக்குச் சொல்லக்கேட்டேன்; இங்கே பின்னேரம் வந்தால், ஐயா நீங்களே ஆச்சியோடு முதற் பேசத் தொடங்குங்கள்" என்று சொல்ல, அந்த மனுஷன் ஓம் என்றான். அன்று பிற்பகல் ஐந்தரை மணிவரையிலிருக்கும், கண்ணகியம்மை இராமனோடு மாதிரம் வந்து மேல் தட்டிலேயிருக்கும்போது, அந்த ஆளும் தான் வழக்கமாக இருக்குமிடத்திற்குப் போயிருப்பதை இராமன் கண்ணகிக்குக் காட்டி, "ஆச்சி, அந்த ஐயாதான் நான்சொன்ன ஆள்" எனலும், "ஓம், இவரை நான் நேற்றும் இந்த இடத்திலிருக்கக் கண்டேன்; ஊரிலும் எப்போதோ ஒருநாட் கண்ட ஞாபகமிருக்கிறது; நல்லவர்போற் காணப்படுகருர்" என்றாள்: இராமன் சில நிமிஷஞ் செல்ல அந்த ஆளிடம் போய், ஆச்சிமாத்திரம வந்திருப்பதால், நீங்கள் போய்க் காணலாம், பேசலாம்" எனலும், "உங்கள் ஆச்சிக்கும் சம்மதமோ?" என்று அந்த ஆள் கேட்க, "சம்மதமென்ன, நீங்கள் போய்ப் பேசலாம்" என்று இராமன்சொல்ல, அந்த மனுஷன் உடனே கண்ணகியிருக்குமிடத்திற்கு எழுந்து செல்ல, இராமன் முந்தியே சென்று, அந்த ஆளின் வரவைக் கண்ணகைக்குத் தெரிவிக்க கண்ணகி உடனே இருக்கைவிட்டெழுந்து "தம்பி, வாரும்" என்று உபசரித்து, அயலிலிருந்த ஒரு நாற்காலியில் இருக்கச்சொல்ல, "நீங்கள் இருங்கள்: நான் இருக்கிறேன்" என்று அந்த ஆள் சொல்ல, கண்ணகியம்மை நாற்காலியிலிருக்க, அந்த மனுஷனும் அங்குள்ள நாற்காலியில் இருந்தான். 'என்னை ஒருபோது தங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்; ஆனால், நான் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பற்றி நல்லாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன்; நேரில் அறிந்துமிருக்கிறேன்" என்று அந்த ஆள் சொல்ல, "எங்கள் ஆண்பிள்ளைகட்கு உங்களைப்பற்றி அதிகம் தெரியுமென்று நினைக்கிறேன்; நான் அவர் போனபிறகு எங்கேனும் புறப்பட்டுப் போவது குறைவு; பிள்ளைக்குப் பாதுகாப்பாக நான் அதிகமாக வீட்டிலேதான் இருக்கவேண்டியது; ஆனாலும் இப்பொழுது இராமன் சொன்னபிறகுதான் உங்களைப்பற்றி நல்லாய் அறிந்தேன்" என்று கண்ணகியம்மை உபசாரமாகச் சொன்னாள்; 'இப்பொழுது நீங்கள் பயணம் புறப்பட்டிருக்கும் நோக்க மென்னவோ' என்று கேட்க, கண்ணகியம்மையும் தானும் மகளும் மலாய்நாட்டில் வேலையாயிருக்கும் தங்கள் மகனிடம் போதல்முதலாகிய விபரங்களையெல்லாஞ் சொல்லி, "தம்பி, மலாய்நாட்டிலே ஏதும் உத்தியோகமாகவிருக்கிறீரோ", என்று கேட்டவுடனே அந்த ஆள், "ஓம்" என்று சொல்லத்தொடங்கித் தன் முழுவரலாற்றையும் ஆதியோடந்தமாச

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமாரும் அரசியலும்

## மதகுரவர் செய்யவேண்டியது யாது?

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

மத குரவர் அரசியலிற் பங்குபற்றலாகுமா? பங்குபற்றி, இன்று பாராளுமன்றத் தபேட்சகராகவருபவர்களில் இன்னாரின்னாரைத்தான் தம் மதஸ்தர்கள் ஆதரிக்கவேண்டும் என்று தம் புத்திமதியைக் கேட்க வேண்டியவர்களுக்கு விதிக்கலாகுமா என்னும் இன்னோன்ன கேள்விகள் இன்று கிளப்பப்படுகின்றன. மத குரவராயுள்ளார், தம் மதக் கோட்பாடுகளைத் தம் ஜனங்களுக்கு உபதேசிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடவேண்டும்; ஜனங்களைச் சன்மார்க்க நெறியிற புகும்படி செலுத்திவருதல் வேண்டும். இவ்வளவுடன் அவர்கள் நின்றுவிட வேண்டுமேயன்றி விவாதத்துக்கேதுவான அரசியல் வியவகாரங்களிற் பிரவேசிக்கக்கூடாது என்று ஓர் சாரார் கூறுவர். அரசியல் என்பது அசங்கதமான ஓர் வியவகாரம். அதில் மதகுருமார் ஈடுபட்டால் வாதப்பிரதிவாதங்களில் பிரவேசிக்கவேண்டும் என்றும் இவர்கள் கூறுவர். பௌத்த சந்நியாசிகள் அரசியலிற் புகக்கூடாது என்று சேனநாயக்காக் கட்சி இன்று கூறுகிறது. ஆனல் அதே சேனநாயக்காக் கட்சி இலங்கையிலுள்ள கத்தோலிக்க மத குருமாரின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு விழைகிறது

○

### அசங்கதமானதா?

அரசியல் அசங்கதமானது அல்ல; ஆந்த இலங்கையில் அரசியல் அசங்கதமாய்விட்டதென்றால், அதற்குப் பொறுப்பாளிகள் இலங்கையரசியல் வாதிகளேயன்றி வேறு யாருமல்ல; நாட்டு மக்களின் சுபீட்சத்துக்கேதுவானது அரசியல். நாட்டு மக்களை முன்னேற்றமடையச் செய்வது அரசியல்; அவர்களின் பொருளாதாரநிலையை விருத்தி செய்வது அரசியல்; சுருங்கச் சொல்லுங்கால் மக்களின் இம்மை வாழ்க்கையைத் திறம்பட நடாத்துவது அரசியலேயாகும்; ஓர் நாட்டு மக்களின் அரசியல்—பொருளாதார வாழ்க்கை சிறப்புறுல்தான் அவர்களின் சமய வாழ்க்கையும் மேலோங்கும்; அவர்களுடைய சன்மார்க்க வாழ்க்கை தழைக்கும். மக்களது சமய வாழ்க்கையையும், உலக வாழ்க்கையையும் பிரித்தல் ஓர்போதும் முடியாது; எனவே சமய வாழ்க்கை மேலோங்க வேண்டுமானல், நாட்டிலே சன்மார்க்கம் தழைக்க வேண்டுமானல், மக்களின் ஆன்ம வளர்ச்சி தடைப்படாது இருக்கவேண்டுமானல், அவர்களது அரசியல் வாழ்க்கையும் திறம்பட இருத்தல்வேண்டும். சமய வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புள்ளன. எனவே, மக்களது ஆன்ம வாழ்க்கை விருத்தியில் சிரத்தை கொண்டுள்ள மத குரவர்கள் அவ்வான்ம வாழ்க்கையின் மூலபலமான அரசியல் வாழ்க்கையிலும் நிச்சயமாக ஈடுபட்டு தம் மக்களை நல்வழிப்படுத்தவேண்டியது அவசியமென்க.

○

### ஐக்கிய முன்னணி வேண்டும்

இன்று உலகத்திலே நிரீச்சுரவாதம் பரவுதற்கும், பல புதிய விபரீதக் கொள்கைகள் பரவுவதற்கும் மூலகாரணம், மதத்தையும் அரசியலையும், சில அரசியல் வாதிகள் பிரித்து வைத்திருக்கும் தந்திரமேயென்க. உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் போதிப்பது அன்பு என்ற ஒரேமார்க்கத்தையே. இந்த அன்பு நெறியை அதிகார வெறிபிடித்த அரசியல்வாதிகள் புறக்கணித்து, ஈடாசை பிடித்து அக்கிரமம் செய்யப் புறப்பட்டமையினலேயே, ஒரு சந்ததியின் காலத்திலே இரண்டு கோரமான யுத்தங்களை நாம் காணநேரிட்டது. உலகிலே இனியும் சமாதானமும் அமைதியும் நிகழவேண்டுமானல், எச்சமயங்களுக்கும் ஒவ்வாத விபரீத சமதர்மக் கொள்கைகள் பரவாதிருக்கவேண்டுமானல், புரட்சி, யுத்தம், இரத்தக்களரி என்பவற்றை இனியாவது நாம் அனுபவிக்காதிருக்க வேண்டுமானல், உலகிலுள்ள எல்லா மதஸ்தர்களும், எல்லா மதக் குருமாரும் அரசியலில் ஈடுபட்டு மக்களுக்கு வழிகாட்ட வேண்டும்; பௌத்த சந்நியாசிகளும், ஹிந்துக் குருமாரும், கிறிஸ்தவக் குருமாரும், மகமதியக் குருமாரும் ஒருங்கு சேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி இந்த விபரீத கொள்கைகள் பரவாதபடி தடுத்தல்வேண்டும்.

○

### சமதர்மிகள் கெடுபிடி

இன்று எங்கள் இலங்கையை எதிர்நோக்கி ஓர் பெரிய ஆபத்து வரவிருக்கிறது. அந்த ஆபத்து எங்கள் வாசற்படியண்டை வந்தேவிட்டது. அதனைத் தடுப்பதற்கு இப்போதுதானும் காலம் போய்விடவில்லை. கடவுள் இல்லை, வேதங்கள் இல்லை, வேதாகமங்கள் இல்லை, கோவில்கள் இல்லை, தேவாலயங்கள் இல்லை, பகுதிகள் இல்லை, எல்லாம் தரைமட்டமாக்கப்படவேண்டும்; ருஷியாவின் சமதர்மக் கொள்கை பரவவேண்டும்; சத்தகமும் சம்மட்டியும் கொண்ட கொடி பறக்கவிட வேண்டும், புரட்சியை உண்டாக்கி இரத்தக் களரியை ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையுடைய சமதர்மிகளின் அட்டகாசத்தைத் தடுக்க, இலங்கையிலுள்ள சகல மத குரவரும் ஏன் ஒன்றுபடக்கூடாது? இலங்கையிலுள்ள மத குருமார் கட்டாயம் அரசியலிற் பிரவேசிக்கவே வேண்டும். அவர்கள் கானகம் சென்று கடும் தவமியற்றுவதற்கோ, தேவாலயத்தில் இருந்து கொண்டு செபம் செய்வதற்கோ, மசூதிகளில் இருந்து தொழுகை நடாத்துவதற்கோ இது சந்தர்ப்பமல்ல.

# இந்தியத் தேசாதிபதிகள்

## நியமன அறிக்கை விபரம்

இந்திய சமஷ்டியின் மாகாணங்களின் தேசாதிபதிகளாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுவிட்டனர் என்று இப்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ஜஒத். ஜெயராம்தாஸ் டௌலத்ராம்; பீகார்

ஸ்ரீ ஜஒத். கே. எம். முன்ஷி மத்திய மாகாணம்

டக்ரர் பீதன்சந்திரராய்: ஒறிஸா

சேர். சாந்துலால் திருவேதி: கிழக்குப் பாஞ்சாலம்

ஆச்சாரிய கிருபாலினி: கிழக்கு வங்காளம்.

சேர். ஆர்ச்சிபல்ட் நை: சென்னை

சேர் ஜோன் கொல்வில்: பம்பாய்

சேர் அக்பர் ஹைதாரி: அஸாம்

இந்தியச் சமஷ்டியரசியலில் இப்போதுள்ள மந்திரிகளுடன் பின்வருவோரும் சேர்க்கப்படுவர்:

ஜனுப் ருவி அகமத் கித்வாய், ராஜகுமாரி அமிர்தகுமாரி, ஸ்ரீ ஜஒத் வி. ஐ. முனிசாமிப்பிள்ளை, ஸ்ரீ என் வி. காட்கில, டக்ரர் ஷியாம்பிரசாத் முக்கர்ஜி.

○

### திருவிதாங்கூரும் சேர்ந்தது

இந்தியச் சமஷ்டியரசியலிற்சேர இதுவரை மறுத்து, தான் சுதந்திரமாய் நிற்கப்போவதாக அறிவித்த திருவிதாங்கூர்ச் சமஸ்தானம், இந்தியச் சமஷ்டியரசியலிற் சேர இப்போது தீர்மானித்து விட்டது. ஹைதராபாத், போபால் என்னும் சமஸ்தானங்களும் இன்னும் இரண்டொரு தினங்களில் இந்திய சமஷ்டியிற் சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன் இவ்விஷயத்தில் இந்தியாவுக்குச் செய்த சேவையை எவராலும் மறக்கமுடியாது.

# மா அளவு

## 3 ரூத்தல் ஆகும்

இப்போது இலங்கையில் மாவின் இருப்பு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. ஆகவே, இப்போது ஆள் ஒன்றுக்கு அளிக்கப்படும் இரண்டு ரூத்தல் விநியோக அளவை மூன்று ரூத்தலாக்க அதிகாரிகள் தீர்மானித் திருக்கிறார்கள் என்று கொழும்பு 'ஒப்சேவர்' பத்திரிகை கூறுகிறது.

அரிசி விநியோகவளவு இப்போது அதிகரிக்கப்படமாட்டா தாகையால், இப்போதுள்ள மாவிநியோக அளவையாவது அதிகரிக்க வேண்டும் என்று சென்ற பிரசுரத்தில் நாம் அரசாங்கத்தை வேண்டிக் கொண்டதும் குறிப்பிடத் தக்கதாம்.

# நாமக்கல் கவிஞர்

## காந்தீயக் கவலைஞரின் கவித்திறன்

( இறைமணி )

[ தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை யவர்கள் ஈழமணித் திருநாட்டுக்கு விஜயஞ் செய்திருக்கிறர்கள். புலவரவர்களின் கவித்திறனை ஒரு சிறிது புலப் படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கம் ]

இன்று தமிழிலக்கிய உலகிலே எத்தனையோ புரட்சிகளும், மறுமலர்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன. மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் தோன்றியிருக்கின்றனர். சிறுகதை எழுத்தாளர்தொகையும் பெருகிக் கொண்டே வருகிறது. கவிஞர்களுள் பலர் பல அரிய கவிதைகள் மூலம் இப்பணியில் உழைத்து வருகின்றனர் இம் மறுமலர்ச்சிக்கு அடிகோலியவருள் முக்கியமானவர் சுப்பிரமணிய பாரதியவர்களே யென்பது ஒப்ப முடிந்த உண்மை

இலக்கியத்தில் மட்டுமென்ன அரசியலிலும் சமூக வாழ்க்கையிலும் கூட எத்தனை புரட்சிகரமான மாறுதல்களேற்பட்டு விட்டன. சுதந்திர சூரியன் கிழக்கு வானிற் கிளரொளி பரப்பி உதயமாகிவிட்டான்—இனிமேல் தமிழ்நாடு தமிழனுடையது. அந்நிய ஆட்சிக்குத் தமிழன்—ஏன் அவன் கலைகளுக்கும் கூட—அடிமைப்பட்டிருந்த காலம் அகன்றுவிட்டது. இலக்கியமென்பது குறிப்பிட்ட வரம்புக்குளடங்குவதல்ல —பரந்தநோக்கும் விரிந்த அறிவும் சுதந்திரமுமுடைய மக்களே அமரத்துவம் பொருந்திய இலக்கியங்களையாக்க முடியும். மேல்நாட்டாரடைந்துள்ள முன்னேற்றத்தை யூன்றி நோக்குவார்க்கு இது தெற்றெனப் புலப்படும். "தேச விடுதலையே உண்மையான இலக்கியத்தை உருவாக்கும் என்பதைப் பாரதியாரும் வலியுறுத்துகின்றார்.

இவ்விதமாகத் தமிழ் நாட்டுக்கும் இலக்கியத்துக்கும் ஒருங்கே தொண்டாற்றியவர்களில் இன்று முன்னணியில் நிற்பவர் நாமக்கல் வெ இராமலிங்கம்பிள்ளை யவர்களாவர். இளமையிலேயே மகாத்மாகாந்தியின் விடுதலைப் போராட்ட இயக்கத்தை ஆதரித்து அதிற் சேர்ந்து இன்றுவரை பாடுபட்டு வருபவர்களில் இக்கவிஞரு மொருவர். காந்திமகானின் அஹிம்ஸா தத்துவத்தைச் சீலமாகக் கொண்டொழுகுதலின் காந்தியக் கவிஞர் எனவும் இவர் இன்று தமிழுலகம் புகழ்ந்து கொண்டாடுகின்றது. 'திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது என்பது முற்றிலு முண்மை

நாமக்கல் கவிஞர் சிறந்த தேசபக்தர். தேசவிடுதலைக்காக சட்டமறுப்புச் செய்து சிறைவாசம் செய்த தொண்டர். தமிழ்ப் பண்பாடு மிகவும் நிரம்பியவர் "காரிகை கற்றுக் கவிபாடும் போலிப் புலவர்களைப் போன்றவரல்ல அவர் நாவன்மையும், பாவன்மையு மொருங்கே யமைந்த இயற்கைக் கவிஞர். நாவலர் என்றதும யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை நினைப்பது போல நாமக்கல் கவிஞர் என்றதும் வெ. இராமலிங்கப் பிள்ளையை நினைக்கிறார்கள் தமிழர்கள். தமிழ் மக்களின் உள்ளத்தே ஒரு தனியிடம் நாமக்கல் கவிஞருக்குண்டு. கலைக்காகவும் தேசத்துக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த அவருக்கு என்றும் தமிழகம் கடமைப் பட்டிருக்கிறது.

தற்காலத்துக் கவிதை யுலகில் எத்தனையோ கவிஞர்கள் உதித்திருக்கின்றனர். ஒரு சில அறிஞர்களைத் தவிர ஏனையோரின் பாடல்கள் எளிதில் நமக்குப் புலப்படா உயர்ந்த நடையில் — கடின சொற்பிரயோகத்தையே உயர்ந்த நடையென்று கருதுகின்றனர் — எழுதுவதே உன்னதக் கவிதை யென்பது இவர்களெண்ணம். நாமக்கல் நாவலரோ இதற்கு முற்றும் மாறனவர். அவரது பாடல்கள் —ஏன் சிறுபாலர்களுக்குந் தான் — மிக இலகுவில் புரியக் கூடியன. ஆயினும் அவைகள் கவிதைப்பண்புக்கு ஒரு சிறிதும் மாறுபட்டன வல்ல. அவரது கவிதைகளின் பண்பே தனி பாலர்களுக்காகக் கவிஞர் பாடிய பாடல்கள் 'பிரார்த்தனை" என்ற பெயருடன் வெளிவந்திருக்கின்றன. கவிஞரின் பாடல்கள் தமிழ் மகனை உறக்கத்தி னின்றும் தட்டி யெழுப்புவன. "கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது" பாடல் கோழையையும் வீரனாக்கி வைரத்தோளேந்தச் செய்யும் மந்திர சக்தியுடையது. தமிழ்த் தாயையும் நாட்டையும் குறிக்கோளாகக் கொண்டு பாடிய கும்மிப் பாடல்கள் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிக் கண்ணீர் கொட்டச் செய்யும் தன்மை யுடையன.

நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை ஒரு கவிஞர் மட்டுமல்ல. சிறந்த மறுமலர்ச்சி எழுத்தாளருங் கூட. இவரது கட்டுரைகள் இளம் எழுத்தாளர்களுக்கோர் முன்மாதிரியாக இருக்கின்றன சிறுகதைகள் சிருஷ்டிப்பதிலும் இவர் சிறந்து விளங்குகின்றார். நவநவமான நவீனங்க ளமைப்பதிலும் நாமக்கல் கவிஞர் திறமையுடையவரென்பதை "மலைக் கள்வன்" என்னும் நவீனமே நன்கு விளக்குகின்றது. கற்பனைத் திறனும் சொற்பிரயோகமும் கற்போருள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

"தனித்தமிழ்க் கட்சி" என்று கூறிக்கொண்டு வழக்கொழிந்து அழிந்த சொற்களைக்கூறி "உள்ளத்தை மருட்டும் கொள்கை" இவரிடம் கிடையாது. பழமையைக் கட்டிக்கொண்டு அழுவதோ முற்றும் பழமையைப் புறக்கணித்தலோ இவரிட மில்லை. காலத்துக்கேற்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்வதில் இவர் பின்னிற்கமாட்டார். இவரது 'சங்கொலி', "தமிழன்இதயம்' என்ற நூல்களிரண்டும் 'தமிழ்க்கல்வி யென்பது பிறருக்குப் புரியாதபடி எழுதுவது' என்ற சித்தாந்தத்தைப் பொய்யாக்கி விட்டன. கவிஞரது வேறு நூல்கள் 'என் கதை' 'அரவணை சுந்தரம்' 'இசைத்தமிழ்' என்பன இவரது பாடல்கள் யாவும் ஒரு சிறந்த கவிஞனின் இதயப் பொக்கிஷத்தைக் கடைந்து புறப்பட்ட அமிர்தமாக விளங்குகின்றன. ஆராய்ச்சிகளும், நவீனங்களும் கட்டுரைகளும் உரைநடை இலக்கியத்துக்கோர் ஊன்றுகோல் போலமைகின்றன.

கவிஞர் நூல்களுள் காப்பியஇலக்கணம் பெரிது மமைய இயற்றப்பட்ட "அவளும் அவனும்" என்ற நூல் தலைசிறந்து விளங்குகின்றது. கற்பனையிலும், தெள்ளிய செந்தமிழ் நடையினலும், புதிப்புது உவமைகளினலும் சமீபத்தில் தோன்றிய காவிய நூல்கள் பலவற்றி னுள்ளும் சீர்பெற்று சிறந்த பேர்பெற்று விளங்குவது இஃதொன்றே. இக்காவியத்தின்கண்ணே பல அரிய வர்ணனைகளும், நீதிநூன் முடிபுகளும் அமைந் திருக்கின்றன. இடையிடையே பாத்திரங்களின் வாய்ப் பேச்சாகக்கொண்டு 'தமிழ்', 'கவிதை', 'தமிழிசை', 'அரசியல்', 'கலை', 'காமம்', 'காதல்', 'கற்பு', தந்திரம், 'மாதர்உரிமைகள்', என்னும் விடயங்கள் நன்கு விளக்கப்படுகின்றன. இந்நூலுக்கு அமைந்திருக்கும் தெய்வ வணக்கமே புதுமைக்

தொடர்ச்சி 4ம்பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமக்கல் கவிஞர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களும், புரட்சிகரமான மாற்றங்களுமுடையது. தாமே புதுவது புனைந்துரைக்கு மியல்புடைய கவிஞர் உவமைகளிலும் புதுமை மணம் வீசச்செய்கிறார். உதாரணமாக ஒன்றிரண்டு தருகிறேன்

மாதவன் கமலத்தின் இரு கண்களைக் கண்டான். எதைப்போல வெனில்,

"ரயிலில் மெயிலில் ராத்திரி வண்டியில்
எஞ்சினின்முன்னுலிருட்டை விரட்டும்
இரண்டு விளக்குகள் ஏககாலத்தில்
தன்னுடைக் கண்களைத் தாக்குதல்
போல"

என்கிறார். தன்னையே மறந்து சந்திரனை நோக்கியிருக்கும் அவர்,

'சந்திர மண்டலச் சாத்திரம்
படிப்போர்
அதையே பார்க்கிற ஆராய்ச்சிபோல

என்று விளக்குகிறார்.

சாரதாவுக்குக் கடிதமெழுதுதற்கு உட்கார்ந்த மாதவன்படுங் கஷ்டங்களை,

'உருவம் தெரியா ஓவியன் போல
சித்திரம் கலைந்த சிற்பியைப்போல
பாட்டு வராத பாவலன்போல
பரீட்சையில் முழிக்கும் பையனைப்
போல

என்று தெளியவைக்குந் திறன் வியக்கத்தக்கது.

ஆசை முறிந்து மானங்கெட்டு மனவருத்தத்துடன் வரும் நிலையை,

'புறமுதுகிட்ட போர் வீரன்போல்
அம்புபட்டுருவிய ஆண்சிங்கம்போல்
புண்பட் டலறும் புலியைப்போல்
சிக்கிக்கொண்ட சிறுத்தையின்
சினமாய்
வேல்பட் டோடும் வேழமேயென்ன
காயம்பட்ட காட்டுப் பன்றிபோல்'

என்று படம் பிடிக்கிறார் கவிஞர் பெருமான்.

ஒரு பெண் தன் காரியம் அபஜெயப்பட்டு தியங்கிக் கலங்கும் நிலையை,

முன்விளக் கவிந்த மோட்டார் காரென
டங்குவா ரறுந்த ஜட்கா வண்டிபோல்
கைத்தடி யிழந்த கிழவன் கணக்காய்
ஊற்றுமை தீர்ந்த பேனுவி னைப்பாய்
தாளங் கெட்ட சங்கீதம் போல
எண்ணந் தடைபட்டு ஏமாந்து நின்றாள்

என்று விளக்கும் சித்திர விசித்திரம் சுவைத்தின்புறத்தக்கது.

கவிஞரது நூல்களிலெல்லாம் இத்தகைய புதுப்புதுக் கருத்துக்கள் பலவற்றைக் காண்டல்முடியும். ஈண்டு பல சொல்லவேண்டியதின்று.

எளிய பதங்கள், எளிய நடை, எளிதிற் புரியக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து வருவோன் நமதுதமிழ்மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகிறான் என்ற பாரதியார் வாக்குக்கு இலக்காகி இன்று தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கும் புத்துயிரும் புத்துணர்வும் ஊட்டியவர் நாமக்கல் கவிஞர் என்பது வெள்ளிடை.

சொற்சித்திர மமைப்பதில் இவர் சிறந்து விளங்குவதுபோலவே வர்ணங்கள் கொண்டு சித்திரமமைப்பதிலும் தேர்ச்சியுடையவராய் விளங்குகிறார். நகைச்சுவைபடப் பேசுதலிலும் நாமக்கல் கவிஞர் தீரர்.

இலங்கை இந்திய கலை யொற்றுமைக்கும் ஜன ஒற்றுமைக்கும் இவரது இலங்கைச் சுற்றுப்பிரயாணம் மிகவும் உதவியாகுமென்று நம்பியிருக்கிறார்கள் தமிழ்மக்கள்.

# மங்குசனி முதலியன

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமி குருக்கள். சுதுமலை.

சந்திர லக்கினத்திற்குப் பன்னிரண்டா மிடத்தில் சனிவரும்போது ஏழரைத் தொடக்கம். 12. சென்மம், இரண்டு ஆகிய மூன்று இராசிகளிலும் இராசியொன்றுக்கு இரண்டரை வருடமாக ஏழரை வருட மிருப்பதினுல் ஏழரைச்சனியென்று வழங்குகின்றது மங்குசனி, பொங்குசனி, மரணச்சனி யென மூன்று வகைத்தாம. ஒருவர் வாழ்நாட்களில் இச்சனி மூன்று தடவை தொடர்த லுண்டு. பிறந்தபோதே ஏழரைச் சனி தொடர்ந்திருப்பின் அது மங்குசனி யென்றும், பின் (20) வருடத்திற்கு மேல் வருவது பொங்குசனி யென்றும், பின் (60) வருடத்திற்கு மேல் வருவது மரணச்சனி யென்றும் சொல்லப்படும். முதற்சனியான மங்கு சனியும், மூன்றும்சனியான மரணச் சனியும் மிகவுங் கஷ்டங்களை யுண்டாக்கும் இரண்டாஞ் சனியான பொங்குசனி அவ்வளவு கஷ்டங்களைக் கொடாது. இதனை "ஆறே முக்காலும் அரைக்காலும் பிடித்துக் கொண்டது" என்ற பரிபாஷையால் சிலர் வழங்கி வருகின்றனர்.

சென்னகாலம சனி ஆறு, எட்டு, பன்னிரண்டு இந்த இடங்களில் இருக்குமேயானுல் அதிக கெடுதிக ளுண்டாம். நல்ல இடங்களில் சுபக்கிரக பார்வையிருந்தால் அதிக கெடுதிகளைச் செய்யாது இத்தோஷம் நீங்க வேண்டுமேயானுல் சனிக்கிழமை விரதத்துடன் ஏதேனும் ஓர் உலோகத்தினுல் சனியினுடைய உருவத்தை யமைத்து வஸ்திராபரண புஷ்பங்களினுல் அலங்கரித்து எட்சாதம் படைத்து பூசித்துச் சற்பாத்திரனுக்குத் தானங் கொடுப்பது மிகவுசிதம். கோயிலுக்குச் சென்று சனீசுவரன் சந்நிதியில் எண்ணெயிட்டு எட்பொதி யெரித்து நம் நட்சத்திரஞ் சொல்லி அர்ச்சனை செய்வித்தல் நன்றும்,

எல்லாக் கிரகங்களை விடத் தீமையைப் பிராரப்த கர்மானுசாரமாக உண்டாக்கக் கூடியவர் சனி ஒருவரேயாகும் இவருடைய தொடர்பால் கஷ்டப்படாத தேவர்கள், இருடிகள், மனுஷர்கள் கிடையாது. "ஸனைர் மந்தஞ் சாதீதிஸ நைஸ்சரம்" எனவே (ஸனை=மந்தம், சர=கதிக்ஷணம்) மெதுவாகச் சஞ்சரிப்பவர் என்பதாம்.

ஆசாரம், தேவபக்தியுடையவர்களை சனிஸ்வரன் கஷ்டப்படுத்துவது கிடையாது. நளச்சக்கரவர்த்தியைப் பிடித்தற் பொருட்டு நிடத தேசத்திற்கு வந்த கலி புருஷன் நளனிடத்திலும் அவனது நாடுமுழுதிலும் ஒரு குற்றதையுங் காணுமல் அவனைத் தான் தொடா வழியின்றி (12) வருஷம் வரைடத் திரிந்து வருந்திய பின்பு ஒருநாள் நளன் அநுஷ்டானஞ் செய்வதற்குக் கால் கழுவுகையில் காலில் ஒருபுறம் தண்ணீர் படாததாகிய குற்றத்தைக் கண்டு அவனைப் பிடித்துக்கொண்டு சூதடச்செய்து இராச்சிய முதலிய எல்லாச் செல்வங்களையு மிழந்து மனைவிமக்களோடு நகர்நீங்கிக் காட்டிற்குப் போகும்படியாகச் செய்தான்.

ஒருவனுக்கு ஏழரை தொடங்கி நடந்தால் அந்த முதலில் நடக்கும் ஏழரையில் முதல் இரண்டரை வருஷமும் மங்குசனியென்றும், நடுக்கூறுவதாகிய இரண்டு வருஷமும் பொங்குசனி யென்றும், மூன்றாவதாக வரும் இரண்டரை வருஷமும் மரணச்சனி யென நினைத்துப் பலாபலன் சொல்லுகின்றார்கள். மேலே காட்டிய பிரமாணமே சுருதியுத்தி அனுபவத்திற்கு இசைந்ததாம் அறிக.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் காலஞ்சென்ற காரைதீவு வடக்கு பொன்னுச்சாமி சிதம்பரப்பிள்ளை இறந்தவர்

தத்துவ இல. 632

காரைதீவு வடக்கு பொன்னுச்சாமி சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சிவகாமிப்பிள்ளை தத்துவகாரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 632 ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக் காணிகளை 1947 ம் ஆ புரட்டாதிமாதம் 3 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## காணிகளின் விபரம்

1 காரைதீவி லிருக்கும் 'கூகைப்புலம்', என்னும் காணி பர நில இலா $2\frac{1}{2}$ யும் பனைகளும் வேம்பும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்குக் கந்தன் பெண் கதிரியினுதனம் மேற்கு வேலாயுதர் சுப்பிரமணியத்திற்கும் கந்தன் பெண் கதிரிக்குமுரிய ஆதனங்கள், தெற்கு நாராணன் முத்தனினுதனம். இதிற் சொரியலாயவராவசி.

2 ஷை 'கூகைப்புலம்' பர நில இலா $5\frac{1}{2}$ யும் பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு கந்தப்பர் சுப்பிரமணியத்தினுதனம் வடக்கு புன்னன் நாராணனினுதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு றேட்டு இதிற் சொரியலாய் $\frac{1}{4}$ பாகம்.

3 ஷை 'கூகைப்புலம்' பர நில இலா 1 (ஒன்று) எல்லை கிழக்கும் வடக்கும் ஐயன் நாராணனுக்கும் பெண் கதிரிக்கு முரிய வாதனங்கள் மேற்கு ஒழுங்கை. தெற்கு சிதம்பரப்பிள்ளையின் மகள் மங்கையற்கரசிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்.

4 ஷை 'கூகைப்புலம்' பர நில இலா $5\frac{1}{2}$ யும் பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு கந்தப்பர் சுப்பிரமணியத்தினுதனம் வடக்கு ஐயன் வினசிக்கும் மறுபேருக்கு முரியவாதனம் மேற்கு ஒழுங்கை. தெற்கு றேட்டு. இதிற் சொரியலாய் 5 32/5 குளி.

5 ஷை பல்லிகை பர நில இலா $5\frac{1}{2}$ யும் பனைகள் வடலிகளும் தென்னைகளும மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி ஆறுமுகத்தின் ஆதனம் வடக்கு பொன்னம்பலம் ஆறுமுகத்திற்கும் பொன்னம்பலம் பெண் செல்லத்திற்குமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

காரைநகர் கிழக்கு
28—7—47

M 98 1-8-47

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

# சக்தியின் மகிமை

1-ம் பக்கத் தொடர்ச்சி

வேதாந்த வாக்யத்தினுல் உண்டாக்கப்பட்ட ஞான ரூபியாகவும், தன்னையே கடக்கச் சாதனமாக ஆகின்றது. 'கேன' உபநிஷதத்தில் ஒரு கதை இருக்கிறது, ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் சண்டையிட்டார்கள். பிரம்மத்தின் அனுக்கிரகத்தால் தேவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆனுல் வெற்றி வெறியில் பிரமத்தை அவர்கள் மறந்தார்கள். அவர்களுடைய அஞ்ஞானத்தைப் போக்க, அவர்கள் முன்னுல் ஒரு யக்ஷவடிவத்தில் பிரம்மம் தோன்றிற்று 'அது யார்' என்று அறிய முதலில் அக்னியை அனுப்பினுர்கள் தேவர்கள். பிரம்மம் 'நீ யார்?' என்று கேட்க, அக்னி தன்னுடைய பிரதாபத்தைப் பற்றி விஸ்தரித்தான். ஒரு புல்லைப் பூமியிற் போட்டு 'இதை எரி' என்று கூறிற்று பிரம்மம். அக்னியால் முடியவில்லை. வாயு தேவதையாலும் அந்தப்புல்லை அசைக்க முடியவில்லை. அமரர்கோனுகிய இந்திரன் யக்ஷ ரூபத்தில் தோன்றியதின் தத்துவத்தை அறிய வேண்டும் என்று முனைந்தான். அப்பொழுது அந்த ரூபமே மறைந்துவிட்டது. அதே சமயத்தில் ஆகாயத்தில் அழகே யுருவெடுத்ததுபோல் ஒரு ஸ்திரீ தோன்றினுள். அவள் ஹிமவானின் பெண்ணுகிய உமை. அவளிடம் இந்திரன் கேட்டான் 'இந்த யக்ஷன் யார்' என்று. அதற்கு அவள் 'அது பிரம்மம்' என்று சொன்னுள். இவ்வாறு தேவர்கள் சக்தியின் மூலம் பிரம்ம தத்துவத்தை உணர்ந்தார்கள். இந்தக் கதையிலிருந்து பிரம்மத்தைத் தவிர வேறு மகிமையோ, பொருளோ கிடையாது என்றும், பிரம்மத்தை பற்றிய ஞான சக்தியின் அருள்வேண்டும் என்றும் எளிதில் உணரலாம். ஆகையால்தான் அத்வைத மதத்தை உணர்த்திய ஆதி சங்கர பகவத்பாதர் 'ஸௌந்தரியலஹரீ' முதலிய ஸ்தோத்திரங்களில் ஜகதன்னையைப் போற்றி இருக்கின்றார். ஓரிடத்தில் தேவியை இவ்வாறு அவர் புகழ்கின்றார்:—

'அவித்தையில் வாழ்ந் திருப்பவர்களின் உள் அந்தகாரத்தைப் போக்கும் ஞானசூரியன் உதயமாகும் துவீப நகரம் நீ. மூடர்களுக்கு (அவர்களுடைய அஞ்ஞானத்தைப் போக்க), சைதன்யப் பூக்களின் தேன் பாயும் நதி நீ. தரித்திரர்களுக்கு சிந்தாமணி நீ. பிறவிக் கடலில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு, ஆதிவராஹ மூர்த்தியின் தந்தம் நீ!,

# ஆவணி மாச விசேஷ தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1-ந் | தேதி | (17 8 47) | ஞாயிறு செல்வச்சந்நிதிக் கோடியேற்றம், சிற்றண்டி கந்தசுவாமி கோயில் கோடியேற்றம். |
| 5 ந் | ,, | (21-8-47) | வியாழன்; நல்லூர் கந்தசுவாமி கோயில். சிவியாதெரு சித்திவிநாயகர், மாகியப்பிட்டி அங்கணம்மைகடவை கோடியேற்றம் வண்மேற்கு நல்லதண்ணீர்க் கிணற்றடி ஞானவைரவர்கோவில் அபிஷேகம் |
| 6 ந் | ,, | (22-8-47) | வெள்ளி: கோக்குவில் மஞ்சவனப்பதிகந்தசுவாமிகோயில் அராலி கரப்பிட்டி விநாயகர், உடுவில் பொருத்தனைக் கந்தசுவாமிகோயில், மண்டைதீவு சித்திவிநாயகர், மல்லாகம் தீலயம்பனைப் பிள்ளையார், தையிட்டி கனையவேற் பிள்ளையார், கைதடி முத்துக்குமாரசுவாமி கோயில், வேலணை பெருங்குளத்து மாரியம்மை கோயில், புன்னாலை வரதராசப் பெருமாள்கோவில் கோடியேற்றம் |
| 8 ந் | ,, | (24-8 47) | ஞாயிறு: தூலச்சிறை நாயனுர் குருபூசை |
| 10-ந் | ,, | (26-8-47) | செவ்வாய்: ஆவணி மூலம், துங்கிலியக்கலையநாயனுர் குருபூசை |
| 13-ந் | ,, | (29-8-47) | வெள்ளி. பிரதோஷ விரதம். ஆவணி ஓணம் |
| 14-ந் | ,, | (30 8-41) | சனி: நடேசர் அபிஷேகம், நல்லூர் மஞ்சம் |
| 15 ந் | ,, | 31-8-47) | ஞாயிறு: பூரணை விரதம், திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் கோடியேற்றம், |
| 21 ந் | ,, | (6-9-47) | சனி. கார்த்திகை விரதம் |
| 26 ந் | ,, | (11-9-47) | வியாழன்: செருத்துணை நாயனுர் குருபூசை |
| 27-ந் | ,, | (12-9 47) | வெள்ளி பிரதோஷ விரதம், புகழ்த்துணைநாயனுர், அதிபத்த நாயனுர் குருபூசை. |
| 28 ந் | ,, | (13-9-47) | சனி இளையான் குடிமாற நாயனுர் குருபூசை நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர். |
| 29-ந் | , | (14 9 47) | ஞாயிறு. அமாவாசை நல்லூர் கந்தசுவாமி கோவில்தீர்த்தம் |
| 30-ந் | ,, | (15 9 47) | திங்கள்: மறைஞானசம்பந்தர் குருபூசை, நல்லூர்கந்தசுவாமி கோவில் பூங்காவனம், வல்லிபுரக் கோயில் கோடியேற்றம், |

சென்னையிலிருந்து கப்பல் பிரயாணம்
மலேயாவுக்கு உங்கள் பிரயாணம் நிச்சயமா ?

எம்மால் சென்ற சில மாசங்களாக நாகபட்டணம் மார்க்கம் ஏற்பாடாகியிருந்த பிரயாண வசதிகள் கப்பல்வரை திருப்திகாமா யிருந்தும் கப்பலில் வசதியீனங்களை யுணர்ந்து எமது நண்பர்கள் சௌகரியத்துடன் குடும்ப சமேதராகப் பிரயாணஞ் செய்வதற்கு ஏற்ற வசதிகளடங்கிய கப்பல் மாசம் ஒருமுறை சென்னையி லிருந்து புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகள் கைகூடுவதை அறியத்தருவதுடன் எம்மிடம் எந்த நேரங்களிலும் விபரம் பெறுதற்கேற்ப ஓர்காரியாலயம் ஸ்ரான்லிறேட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்போல் நாகபட்டணம் மார்க்கமும் வசதிகள் செய்யப்படும்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்

Std 23, 6-6-47—6-8-48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லிமுடித்தான்; தான் விவாகஞ் செய்ய ஊரிலே முயற்சிபண்ணியதையும், ஆனற் கைகூடாமையையும் மிக விபரமாக அந்த ஆள் சொல்லும்போது, "ஏன், இன்னும் சில மாசம் ஊரிலே தங்கி, ஒருபெண்ணை ஒழுங்கு செய்து விவாகத்தையும் முடித்துப் பெண்ணையுங் கூட்டிக்கொண்டு உத்தியோகத்திற்குப் புறப்படலாமே" என்று கண்ணகி கேட்க "உத்தியோகத்திற்குச் சீக்கிரம் வரும்படி அதிகாரிகள் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள்; தவறவிட்டாற் பின் இப்யோகைக்குக் கிட்டாது; எதுவும் ஆங்காலந்தானே ஆகும ஆச்சி; எல்லாம் ஆண்டவன சித்தத்தைப் பொறுத்துள்ளன' என்று சொல்லி அந்த மனுஷன் பெருமூச்சு விட்டான். அந்தஆள் தன்னேடு ஊடாடிய மரியாதையான முறையினுலும், இனிய வார்த்தையினுலும் அவன்நல்ல குலங்குடியிற் பிறந்தவனெனவும், பேசுவனவெல்லாம்நிசந்தானெனவும் கண்ணகியம்மை யெண்ணிஞள்; "ஆங்காலந்தானே ஆகும் ஆச்சி" என்று அந்த மனுஷன் சொன்னதைக் கேட்டபோது, அவன் தெய்வத்தில் விதியில் நம்பிக்கையுள்ளவனென்றுங் கண்ணகியம்மை நினைத்தாள்; அவன் விஷயத்தில் அவளுக்கு அநுதாபமுண்டானது; அவள்பின்னருஞ் சிறிதுநேரம் அங்கே இருந்துவிட்டு, "பொழுது பட்டுவிட்டது; நாளைப் பின்னேரக் காணலாந்தானே" என்று அந்தஆளுக்குஞ் சொல்லிவிட்டு மக்களிருக்குமிடத்திற்கு மீள, அதனைக்கண்ட இராமனும் கண்ணகியின்பிறகேபோனன்; "ஆச்சி, எப்படி அந்த ஐயா" என்று இராமன் கேட்க, "நல்லபிள்ளைபோற் காணப்படுகிறார்" என்று சொல்லிக்கொண்டு மக்களிருக்குமிடத்தையடைந்தாள் கண்ணகையம்மை.

### மரணம் வயசையுத்தேசித்து வருவதல்ல

அன்றிரவு போசனம் முடித்துக்கொண்டு இராமனும் தான் படுக்குமிடத்திற்குப் போய்விட, மகககளும் படுத்து உறங்க, கண்ணகியம்மைமாத்திரம் உறக்கம் வரப்பெறுளாய்ப் படுக்கையிற்கிடந்தபடி யோசனைசெய்துகொண்டு கிடந்தாள். அர்த்த சாமம்வரை நித்திரையின்றிக் கிடந்த கண்ணகியம்மை "மக்காள் உறங்கிவிட்டீர்களோ" என்று மக்களை விளிக்க, 'அம்மா, நான் உறங்கி விழித்துவிட்டேன்; தங்கைச்சி, அசை ஊற்றநித்திரை" என்றுள் சிவபாக்கியம்; "மகளே, இப்படி என் பக்கத்தில் வா" என்று தாய் சொல்ல, மகள் பக்கலிற் போயிருந்துகொண்டு "ஏன், அம்மா உங்களுக்கு நித்திரை குழம்பிவிட்டதோ" என்று கேட்க, ஆமடி மகளே, பொழுது பட்டநேரந்தொட்டு ஒரு கருமத்தையிட்டு யோசிக்கத் தொடங்கினேன் அதனுல் நித்திரை குழம்பிவிட்ட" தென்று தாய் சொல்ல, 'கருமம் என்ன அம்மா" என்று மகள் ஆவலுடன் கேட்டாள். "வேறென்றுமல்ல மகளே, எங்கள் இராமன் சொன்ன ஆளை இன்று அந்திநேரத்தில் நேரிற்கண்டேன், அந்தஆளாசுநானிருக்குமிடத்திற்கு வந்து பேசியதினுல் நானும் பேசினேன்; நல்ல பிள்ளை; மரியாதையாக ஊடாடுகிறான்; நல்ல தோற்றம், வயசுகொஞ்சங் கூடிவிட்டதுதான்; முப்பத்தைந்துக்கும் நாற்பதிற்கு மிடையில் மதிக்கலாம்; ஆனுல் ஆண்பிள்ளைக்கு அது அதிக வயசல்ல; உங்களுடைய தகப்பஞர் மகளே, எனக்கு இருபது வயசிக்கு மூத்தவர்; ஆனுலும் நாங்கள் இல்வாழ்க்கையை இயன்றவரையில் வறுமையிற் செம்மையாக நடத்தித்தானே காலங் கழித்துவிட்டோம்; ஆனதால் வயசைப் பற்றிச் சிந்திப்பதிற் பயனில்லை; மரணம் வயசையுத்தேசித்து வருவதல்ல, ஆறிலுஞ் சா, நூறிலுஞ் சா என்பது உண்மை: அந்தப் பிள்ளை தன்னுடைய நிலைமை முழுவதையும் உள்ளபடி எனக்குச் சொல்லிவிட்டான்; இரண்டாந் தாரமாகக் கல்யாணஞ் செய்யலாமென்று ஊரிலே நின்றபோது தான் பல முயற்சி செய்து பெண் சந்திக்கவில்லையென்ற காரணத்தினுல், தன் தலைவிதியை நொந்துகொண்டு மீளவும் உத்தியோகம் பார்ப்பதற்காக மலாய் நாட்டிற்குப் புறப்பட்டு வருவதாகவுஞ் சொல்லுகிறான் அந்தப் பிள்ளை; போதிய பொருள் பண்டம் காணி பூமியெல்லாமுண்டென்று எங்கள் ராமன் சொன்னுன்: இவைகளையெல்லாம் யோசித்துக் கொண்டு கிடந்தமையினுல் என் நித்திரை குழம்பிவிட்டதடி கண்ணே" என்று கவலையோடு சகல விருத்தாந்தங்களையும் மகளுக்குச் சொல்லிமுடித்தாள் கண்ணகி: "அதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் அம்மா" என்று மகள் கேட்க, "நான் என்ன செய்வது? எங்கள் சின்னத் தங்கைச்சியைப்பற்றி நினைத்தேன்" என்றுள் தாய் —(வரும்)

## கட்டுப்பாடு இல்லை

மா விநியோகம் சம்பர்தமாக விருந்த கட்டுப்பாடுகளைநீக்க அதிகாரிகள் தீர்மானித்து விட்டனர். இதன் பயனுக மாவை ஓரிடத்தி லிருந்து இன்னேரிடத்துக்கு எவ்வித கட்டுப்பாடு மின்றிக் கொண்டு செல்லலாம். அதுவுமன்றி, ஜனங்களுக்கு வேண்டிய அளவு மாவை வியாபாரிமாரும் சங்கக் கடைகளும் தாராளமாகக் கொடுக்கலாம். ஆனுல் மா விலை கட்டுப்படுத்தப் பட்டே யிருக்கும்.

## காணி விற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு 571-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த சட்டளைப்படி, கீழே விபரிக்கப்பட்டிருக்கும் இரண்டு காணிகளை வாங்குதற்குரிய கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள், இந்த விளம்பரம் வெளியான 21 நாட்களுக்கிடையில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கிடுத்தார், அல்லது என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். ஆதன உறுதிகளை எனது கந்தோரிற் பார்த்துக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் உறையின் மேற்பாகத்தில், "வழக்கு இலக்கம்571" என்று எழுதவும்.

ஆதன விபரம்

1 யாழ்ப்பாணம் டிஸதிறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு, மானிப்பாய்க் கோவிற்புற்று. மானிப்பாயில் உள்ள கோட்டிடப்புலம் என்னும் காணி நிலப்பரப்பு 7 செப்பயிர் வான்பயிர்களும், கிணற்றுப்பங்கு தண்ணீர் வழி வாய்க்கால் உரித்தும், வீடும், பனைமரங்களும், வடலிகளும், எல்லை கிழக்கு மாதன் கணபதிக்குரிய ஆதனமும், வேலன்இராமலிங்கத்துக்குரிய ஆதனமும்,வடக்குகந்தையன் பெண் நாச்சிக்கும் மேற்கு பூதர் பொன்னையாவுக்கும் உரிய ஆதனமும் ஒழுங்கையும், தெற்கு நாகமுத்தன் பெண் சீதேவிக்குரிய ஆதனங்கள்.

2 மேற்படிடிஸ்திறிக், மேற்படிபிரிவு மேற்படிகோவிற்பற்று, மேற்படி மானிப்பாயிலுள்ள கிழத்தோட்டம் என்னும் காணி நிலப்பரப்பு 19 இதில் வடபக்கத்திலிருக்கும் அலாப்பங்காகிய 9½ பரப்பு. பனைமரங்களுடன். எல்லை கிழக்கு ஐயன் பெண் சிதம்பரத்தி, ராமன் அரணி என்பவர்களாதனம்; வடக்கு குட்டியன்பெண் மேரியினுதனம்; மேற்கு வயிரவி முருகாதும், பெண் கற்பகத்தினதும் ஆதனங்கள்; தெற்கு குட்டியன் கைப்பெண் கற்பகத்தின் உரிமைக்காரியினுதனம். இதடங்கலும், காணிக்குப் போய்வரும் வழிவாய்க்காலுரித்தும் நெடுங்கால ஆட்சி உரிமைப்படி.

E M. மதியாபரணம்
பிறக்ரர்

ஸ்ரோவல் வீடு
மானிப்பாய்

M 10) 1-8-47

## உடுவில், சுகாதாரவாரவிழா

### மூன்று நாள் நிகழ்ச்சி வைபவம்

உடுவில் சுகாதார வார விழா 20.7.47 முதல் 25.7.47 வரையும் திருப்திகரமாக நடைபெற்றது.

சுகாதாரம், கிருஷிகம், கைத்தொழில் சம்பந்தமாக உடுவில் தெற்குச் சைவப் பாடசாலையில் ஏற்படுத்திய சிறந்த பொருட்காட்சி டக்ரர் எஸ். சுப்பிரமணியம் அவர்களால் 26.7.47 வெள்ளிக்கிழமை மாலை 5.45வரையில் திறந்துவைக்கப்பட்டது.

அன்று நடந்த பகிரங்கக் கூட்டத்தில் யாழ்ப்பாணச் சுகாதார வைத்தியர் டக்ரர் எஸ். வி. துரைராசா அவர்கள் தலைமை வகித்தார் இலங்கை வைத்திய சுகாதார அதிபாகிய டக்ரர்எஸ். எப். செல்லப்பா அவர்கள் ஓர் உபந்நியாசம் செய்தனர். அவர் தமது உபந்நியாசத்தில் முதல் சுகாதார வார விழாவைப்பற்றியும். பின் மலேரியாவைத் தடுக்கும் இயக்கம் செய்துவரும் பிரயோசனமான வேலைகளைப்பற்றியும் 1945, 46-ம் ஆண்டுகளின் பொதுமரணம், கர்ப்பிணிகள மரணம், சிசுக்கள் மரணம், அதனுல் குறைந்திருப்பதைப் பற்றியும் எடுத்துக் கூறினுர். அந்த இயக்கத்தின் நோக்கம் இலங்கையில் மலேரியாவைத் தொலைப்பது என்றும், மலேரியாவால் பீடிக்கப்பட்டிருக்கும் பெரும்பகுதிகளைத் திருத்தி விளை நிலங்களாக்குவதென்றும் கூறினுர். டி. டி. ரீ என்று சொல்லப்படுகிற கிருமி சத்துரு மலேரியாவை அழிக்க நல்ல மருந்து என்றும், அதன் உபயோகத்தால் வவுனியா, கிளிநொச்சி முதலாம் இடங்கள் அதிக நன்மையை அடைந்திருக்கின்றன என்றும், டி. டி, ரி.மாவை இப்போது மண்ணெண்ணெய் இல்லாமல் நீரில் கரைத்து நன்கு உபயோகப்படுத்தக்கூடியதாக இருப்பதினுல் இலங்கையில் அநேக பாகங்களில் பாவிக்கக்கூடியதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

'மைக்கல் குணரத்தின சுகாதார கேடயம்" என்பதை யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய நிலயம் பெற்றதை மெச்சியும், உடுவில் சுகாதாரப் பரிசோதகர் சுகாதார வேலைகளில் காட்டுகிற ஊக்கத்தை வியந்தும் அவர் கூறினுர்.

டக்ரர் லேடி ஆர். எல். ராமநாதன் தமது பேச்சில் சுகாதார பரிசோதகர் தமது கடமைகளைச் செய்யும்போது ஏற்படும் கஷ்டங்களைப்பற்றியும், அவரோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும், சுகாதார வாரங்களில் காண்கிற கேட்கிறவைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறினுர்.

தலைவர் தமதுகுறிப்புரையில் கர்ப்பிணிகள் பிரசவ சிசு பரிபாலன ஸ்தாபனங்களுக்குப் போகவேண்டிய அவசியத்தைப் பற்றியும், வீடுகளில் வேலையில்லாமல் இருக்கும் கற்ற யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்பிள்ளைகள் மருத்துவம் அல்லது தாதி (Nursing) வேலைகளில் சேர்ந்து ஜனசமூகத்திற்கு உபயோகமுள்ளவர்களாய் இருக்குமாறும் கூறினுர்.

அந்நாள் நிகழ்ச்சிகள் ஓர் சுகாதார கதம்பக் கச்சேரிப் போட்டியுடன் முடிவுற்றது.

விழாக் கடைசி நாளாகியசனிக்கிழமை திரு. T C. இராசரத்தினம் அவர்களின் தலைமையின்கீழ் கூட்டம் நடைபெற்றது, டக்ரர் A B. C. துரை அவர்களும் பாடசாலை வித்தியாதரிசி திரு. S. இராமலிங்கம் அவர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்திஞர்கள். ஒரு சுகாதாரக் கதம்பக் கச்சேரியுடன் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

ஸ்ரீமதி T.C. இராசரத்தினம் அவர்கள பரிசில் வழங்கிஞர்கள்.

தலைவர் உடுவில் சுகாதார பரிசோதகர் செய்த ஒழுங்குகளைவியந்து பேசும்போது தான் கண்ட சுகாதார வார விழாக்களுள் இவ்வாண்டில் உடுவிலில் நடைபெற்ற விழாவே சிறந்தது என்று கூறினுர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸதிறிக்கோட்டில் காலஞ்சென்ற காரைதீவு கிழக்குச் சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளையின் தத்துவம். இறந்தவர்

தத்துவ இல 152

காரைதீவு மேற்குக் கனகசபை பொன்னம்பலம் தத்துவகாரன்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 152-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1947 ம்வருஷம் ஆவணி 22 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

காரைநகர் தங்கோடையி லிருக்கும் மணிவிலாக்கையும் குமார னடைப்பும் பரநில இலா 56 குளி 13½ யும் அதற்குரியவைகளும் எல்லை கிழக்குப் பரமநாதர் சிவசோதியும் பங்காளரும் மறுபேரும் வடக்கு முருகர் கனகசபையும் பங்காளரும் மேற்கு கடறகரையும் இராமஞதர் ஆறுமுகத்திஞதனமும் தெற்கு செல்லத்துரை பெண் வள்ளியம்மையிஞதனம்.

ஏவ. ஏரம்பமூர்த்தி
கொம்மியூனர்

காரைநகர் கிழக்கு
21—8—47.

M 97 1—8—47

## தேவை

சிவன் ஐக்கிய பண்டகசாலைக்குத் தகுதி வாய்ந்த ஓர் மனேச்சர் தேவை. சங்கப் பிரமாணங்களுக்கமைய நடக்கவேண்டும்.

தொடக்கத்தில் மாதச் சம்பளம் ரூபா 55 கொடுக்கப்படும். பிணைப்பணம் ரூபா 450 கட்டவேண்டும். விரும்புவோர் காரியதரிசி அவர்களுக்கு 30-8-47 க்கு முன் விண்ணப்பஞ் செய்யவும்.

சிவன்கோவிலடி இங்ஙனம்
வட்டுக்கோட்டை ந நடேசர்
29-7-47 காரியதரிசி.

M 101 1-8 47 — 29-8-47


## யூனியன் களியாட்டமும பொருட்காட்சியும்

யூனியன் கல்லூரி மைதானத்தில்

ஆகஸ்டு, 6—16, 1947

ஆகஸ்டு, 6 — புதன் மாலை 5 மணிக்கு

மாட்சிமை தங்கிய நீதியரசர்

செ. நாகலிங்கம், K. C., அவர்கள்

களியாட்ட விழாவினைத் திறந்துவைப்பார்கள்

அதியற்புத அலங்காரங்கள்! கண்கவர் சோதிக் காட்சிகள்!!

அருமையான திருட்டாந்தங்கள்!! உல்லாச கதம்பக்கச்சேரிகள்!!

மேற்படி கார்ணிவல் விழாவைத் தரிசிக்க வருவோர் வசதிக்காக, காங்கேசன்துறை — யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு — அச்சுவேலிக்கூடாக, பஸகள் இரவிலும் நேரம் செல்லச் சஞ்சாரம் செய்யும்

Misc 103 1-8-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி ஆகஸ்ட் 2

காலை 7-15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 கே சாரதாமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 என் மதுரம் வயலின் 8-30 குரல்வகை இசைத்தட்டு 9 முடிவு

1 என் மதுரம் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைகளுக்கு பாடசாலைக்குறிப்பு 2-15 எஸ் அல்லாபிச்சை பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 கே சாரதாமணி பாட்டு 5-40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலததில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் அல்லாபிச்சை பாட்டு 7-15 கிராம நிகழ்ச்சிகள் 6 எஸ் அல்லாபிச்சை பாட்டு 7-15 பிரயாண பிரச்சினை 7-30 தமிழில் செய்திகள் 7-45 எம் எம் தண்டபாணிதேசிகர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நூல் வணி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 வி வேணுகோபால் கிளாரினெட் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

ஞாயிறு ஆகஸ்ட் 3

காலை 7·15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருவாலியூர் ஆர் எஸ் மணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே பி சுந்தராம்பாள் இசைத்தட்டு 8 30 பி வி நாராயணி லக்ஷ்மணன் வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 கனசக்காட்சி 12-35 மணி பர்ஸ் நாடகம் 12-45 "காரணம் புரிந்தது" 12-55 பஞ்சகதி வின்யாஸம் தாளக்கற்பனை 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2 10 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 திருவாலி ஆர் எஸ மணி பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி வி நாராயணி லக்ஷ்மணன் வீணை 7.30 தமிழில் செய்திகள் 7-45 சொல்லம்பு இலக்கியத்தில் 8 டி என் மாணிக்கம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 பூங்குயில் நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வாணிலை 9-45 எம் எஸ் சுப்புலட்சுமி இசைத்தட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஆகஸ்ட் 4

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருவிடமருதூர் எம் சுப்பிரமணியம் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் ஆ இ ரே வித்வான்கள் தயாரிப்பு 8-30 பி சொக்கலிங்கம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பி சொக்கலிங்கம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி சொக்கலிங்கம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருவிடமருதூர் எம் சுப்பிரமணியன் நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி ஏ நாராயணன் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7.45 புதிய வெளியீடு இசைத்தட்டு 8 வி ஏ நாராயணன் பாட்டு 8-30 நாட்டுப் பாடல்கள் டெல்லி அஞ்சல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஜாதிகாராய், கமால் இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வாணிலை 9-45 கே வி தாளிதாஸ் பாட்டு 10 டி சௌடையா வயலின் இசைத்தட்டு 10-15 மதுரை மணிஐயர் இசைத்தட்டு 10-30 முடிவு.

செவ்வாய் ஆகஸ்ட் 5

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 W. S ராமநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டு வாத்தியம் 8 30 வேதாரண்யபுரம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வேதாரண்யம் என் கனகாம்புஜம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 W. S. இராமநாதன்பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 தாளவாத்தியக் கச்சேரி 7.30 தமிழில் செய்திகள் 7-45 செம்பை வைத்யநாத பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் வி கிட்டப்பா இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வாணிலை 9.45 இரு வயலின்கள் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.


## தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனாகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன் எழுதவும். 40 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 ஈப்போ ரோட்
செண்டுல், கோலாலம்பூர்
தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்
Mis 77 7-7-47 to 5-8-47.



## சிறந்த சங்கீதக் கச்சேரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கட்டடநிதியின்பொருட்டு

இந்திய தேசியராணுவப் பெண்கள்பகுதிக் காரியதரிசியாகிய

**குமாரி S. N. சரஸ்வதியும்**

அவர் கோஷ்டியினரும்

1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 2ந் உ சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில்

நீதியரசர் கௌரவ ஸ்ரீ

C. நாகலிங்கம் அவர்கள் அநுசரணையில்

சிறந்த சங்கீதக்கச்சேரி நடத்துவர்

சங்கீத ரசிகர்கள் இவவருந்தருணத்தை இழந்துவிடாது சமுகஞ்செய்க

Mis 88 18—1-8-47.



உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

## திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றனன்.

"போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியர்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1.7-47 30-9-47



## இந்துசாதனம்

### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9 50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.



## விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், கண்வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறேனென்பதையும், கட்பார்வைக்குரிய கண்ணுடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் { காலை 9 மணிதொடக்கம் 12 வரை / மாலை 2 ,, 5 ,, }

Tst 28 11-7—10-10-47.

S. [illegible]



## பசந்த லேகியம

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4-48



## தந்தரோக சஞ்சீவி

### கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுர்வேத சிவசோதி மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30 6.48 (வெ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna. on Friday. August 1, 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org